<u>***நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்***</u>

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**
**நீதித்துறை நடுவர்**
**அம்பத்தூர்**
**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 04 ஆம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1149/2025**

**TNTR29-006323-2025**

| | | |
|---|---|---|
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும்<br><br>குற்ற எண். | :<br><br>: | அரசு தரப்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>வி-7 நொளம்பூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 128/2025 |
| எதிரிகளின் பெயர், வயது மற்றும் முகவரி | : | மேசாக், வயது - 19/2025,<br>த/பெ.மெல்காம்,<br>எண்.3, முத்து கோயில் தெரு, மூர்த்தி நகர்,<br>திருமுல்லைவாயல், சென்னை - 600 062.<br>2. கணேஷ்குமார், வயது-19/2025<br>த/பெ.அருள்,<br>எண்.20, 5வது பிளாக், சோழம்பேடு பழைய வீடு, விநாயகர் கோவில் தெரு,<br>திருமுல்லைவாயல், சென்னை - 600 062.<br>3.பரத், வயது-19/2025<br>த/பெ.பிரபாகரன்,<br>எண்.1, தென்றல் நகர், 6வது தெரு,<br>திருமுல்லைவாயல், சென்னை - 62 |

| | | |
|---|---|---|
| | | 4.கௌதம், வயது-18/2025,<br>த/பெ.ரமேஷ்<br>எண்.26, மரகத சந்திரசேகர் தெரு,<br>திருமுல்லைவாயல், சென்னை - 600 062. |
| எதிரிகளின் ஜாதி அல்லது இனம் | : | 1வது எதிரி கிறிஸ்தவர் 2 முதல் 4 வரையிலான எதிரிகள் இந்து |
| எதிரிகளின் தொழில் | : | கூலி |
| குற்ற நிகழ்வு நாள் | : | 09.07.2025 |
| புகார் தேதி | : | 10.07.2025 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 11.07.2025 |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 14.07.2025 |
| விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| தண்டனை மற்றும் உத்தரவு | : | 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 304(2) r/w 3(5) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு ஒருநாள் நீதிமன்றம் கலையும் வரை மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு அபராதம் தலா **ரூ.2,000/-** விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **ஒரு வார காலம்** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் 4 வது எதிரி மீது |

| | | |
|---|---|---|
| | | நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 317(2) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு அபராதம் **<u>ரூ.2,000/-</u>** விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **<u>ஒரு வார காலம்</u>** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 271(2) BNSS இன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. அபராதம் செலுத்த தவறுகைக்கான தண்டனையை தனியாக அனுபவிக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மொத்த அபராதத் தொகை **<u>ரூ.8,000/-</u>**<br>இவ்வழக்கில் பி.ஐ.எண்.432/2025 தாக்கல் செய்துள்ள இருசக்கர வாகனம் ஒன்று மற்றும் விவோ செல்போன் ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுச் சென்றுள்ளதால் வழக்கு சொத்துக்களை அதன் உரிமையாளர்களே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவர்கள் எழுதிக் கொடுத்த பிணை முறி இரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது. |
| காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுதரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதில் காலதாமதம் |

இந்த வழக்கு 02.09.2025 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்பாபு என்பவர் முன்னிலையாகியும் இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

வி-7 நொளம்பூர் காவல் நிலையம், குற்ற எண். 128/2025 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 193(2) BNSS இன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

### 1) குற்ற இறுதி அறிக்கை :-

சாட்சி-1 தர்மராஜன் என்பவர் சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள டாஸ்மாக்கில் விற்பனையாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 09.07.2025 ஆம் தேதி இரவு சுமார் 23.50 மணியளவில் சாட்சி-1 பணிமுடித்து தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது வி-7 நொளம்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சம்பவயிடமான முகப்பேர் மேற்கு, கம்பர் சாலை, டிஎன்எஸ்சி வங்கி அருகே வரும் போது எதிரிகள் சுயலாபம் அடையவேண்டும் என்ற ஒருமித்த கெட்ட எண்ணத்தோடு 1வது எதிரிக்கு சொந்தமான TN-13-AJ-3135 YAMAHA R15 என்ற பைக்கை 3வது எதிரி ஓட்ட அவருக்கு பின்னால் 2வது மற்றும் 1வது எதிரி அமர்ந்து கொண்டு சாட்சி-1 இன் அருகில் சென்று 1வது எதிரியும், 2வது எதிரியும் சாட்சி-1 இன் கையில் வைத்திருந்த விவோ செல்போனை பறித்து கொண்டு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்திலேயே வேகமாக தப்பிச்சென்று குற்றம் புரிந்துள்ளார்கள்.

2. எனவே 1 முதல் 3வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன்படியும் இதன் தொடர்ச்சியாக 1 முதல் 3 வரையிலான எதிரிகள் பறித்து சென்ற சாட்சி-1 இன் விவோ செல்போனை விற்று தருமாறு அவர்களது நண்பரான 4வது எதிரி கௌதம் என்பவரிடம் கொடுத்ததாகவும், 4வது எதிரி கௌதம் அது நேர்மையற்ற முறையில் கிடைக்க பெற்ற பொருள் என தெரிந்தும் அதனை வாங்கி தன் வசம் வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் கீழ் வி-7 நொளம்பூர் காவல் உதவி ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் 02.09.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 02.09.2025 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு 230 BNSS பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 04.11.2025 ஆம் தேதியன்று 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்தும், அது குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

5. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 1 முதல் 11 வரையிலான சாட்சிகள் காட்டப்பட்டு அதில் அ.சா.1 மட்டும் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ. 1 முதல்

அ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பு சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின் வருமாறு :-**

கடந்த 10.07.2025 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஜீவநடேசன் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி திரு.தர்மராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.த.சா.ஆ.1** ஆன புகாரினைப் பெற்று குற்ற எண். 128/2025, சட்டப்பிரிவுகள் 304(2) உ/இ (5), 317(2) பி.என்.எஸ் இன் கீழ் **அ.த.சா.ஆ.2** ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அதன்பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் திரு. ராஜ்குமார், திரு. சண்முகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.3** ஆன பார்வை மகஜரும், **அ.த.சா.ஆ.4** ஆன மாதிரி வரைப்படமும் தயார் செய்து, மேற்படி சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர், திரு.ஜீவநடசேன் என்பவர் ஆய்வாளர் திரு. இளங்கோவன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார்.

7. அதன் பின்பு வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரி மேஷாக் என்பவரை விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் தரவிருப்பதாக கூறியதன் பேரில் சாட்சிகள் திரு.சிவக்குமார் மற்றும் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் எதிரி பயன்படுத்திய வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகளின் மூன்னிலையில் **அ.த.சா.ஆ.7** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, மேலும், எதிரி கௌதம் என்பவரை கைது செய்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திரு.ஜனார்தனன், திரு.மனோஜ் ஆகியோர் முன்னிலையில் பெற்று அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான செல்போன்களை அதே சாட்சிகளின் முன்னிலையில் **அ.த.சா.ஆ.8** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். மேலும், எதிரிகள் திரு.மேஷாக், திரு.கணேஷ் குமார், திரு. பரத், திரு. கௌதம் ஆகியோர்களை கைது செய்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திய போது நீதிமன்றம் எதிரிகளை சொந்த ஜாமீனில் விடுவித்துள்ளது. அதன்பின்பு ஆய்வாளர் வழக்கு சொத்துக்களை **அ.த.சா.ஆ.9** ஆன படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மேலும், சாட்சிகள் திரு. சந்திரசேகரன், திரு. இளையராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை 02.09.2025 அன்று தாக்கல் செய்துள்ளார்.

8. புகார் **அ.த.சா.ஆ.1**, முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2**, பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4**, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5**, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.6**, கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.7**, கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.8**, படிவம் 91 **அ.த.சா.ஆ.9**, புகைப்பட நகல் **அ.த.சா.ஆ.10** செல்போன் மற்றும் இருசக்கர வாகனம் **அ.த.சா.பொ.1** ஆகும். இதுவே அரசுதரப்பு சாட்சியத்தின் சுருக்கம் ஆகும்.

9. இவ்வழக்கில் கடந்த 04.06.2026 ஆம் தேதியில் அரசுதரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 351(1) (b) BNSS இன் கீழ் வினவிய போது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை என கூறினார். எனவே எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

## 10. **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை :-**

இவ்வழக்கின் 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

11. **<u>தீர்வு</u>**

(i) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுதரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், அ.த.சா.பொ.1 ஆன சான்று பொருளிலிருந்தும், 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

(ii) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி 1 திரு.தர்மராஜன் மற்றும் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 10 வரையிலானவர்கள் விசாரணை செய்யப்படவில்லை எனவும், புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதுமானதாக அமையவில்லை எனவும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இவ்வழக்கை முடிப்பதற்காக எவ்வகையிலோ கிடைக்கப்பெற்ற வழக்கு சொத்துக்களைக் கொண்டு எதிரிகள் மீது தவறான சங்கதிகளின் அடிப்படையில், சரிவர புலன்விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனவும், அவர்களிடமிருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும், அரசுதரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

(iii) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி-1 திரு.தர்மராஜன் மற்றும் ஏனைய பட்டியல் சாட்சிகளான 2 முதல் 9 வரையிலானவர்கள் தற்பொழுது எங்கிருக்கிறார்கள்? என்பது கண்டறிய முடியாததால் மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்வதிலிருந்து அரசுதரப்பு விலக்கி கொண்டு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன் என்பவருக்கு பதிலாக அ.சா.1 ஆக காவல் உதவி ஆய்வாளர் திரு.அய்யனார் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(iv) மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து கடந்த 09.07.2025 அன்று இரவு 23.50 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான திரு.தர்மராஜன் என்பவர் வேலை முடிந்து முகப்பேர் மேற்கு, கம்பர் சாலை, TNSC வங்கி அருகே வரும் போது இவ்வழக்கின் எதிரிகள் 1வது எதிரி மேஷாக், 2வது எதிரி கணேஷ்குமார் மற்றும் 3வது எதிரி பரத் ஆகியோர் சேர்ந்து சட்டவிரோதமாக ஆதாயம் அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு TN-13-AJ-3135 என்ற பதிவு எண் கொண்ட YAMAHA R15 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து மேற்கண்ட நிகழ்நிலை புகார்தாரரான திரு.தர்மராஜன் என்பவரிடமிருந்து விவோ செல்போனை பறித்து திருடிச் சென்றுள்ளார்கள் என்பது உறுதியாகிறது. மேலும் 4வது எதிரியான கௌதம் என்பவரிடம் திருடிய செல்போனை விற்று தருமாறு கொடுத்ததும், 4வது எதிரி அது நேர்மையற்ற முறையில் கிடைக்க பெற்ற பொருள் என தெரிந்தும் அதனை தன் வசம் வைத்திருந்ததும் உறுதியாகிறது.

(v) எதிரிகள் தரப்பில் இவ்வழக்கில் தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளோ, நிகழ்நிலை புகார்தாரரான திரு.தர்மராஜன் என்பவரை விசாரணை செய்யப்படவில்லை என வாதம் முன் வைக்கப்பட்டாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளரின் நம்பத்தகுந்த சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரர் திரு.தர்மராஜன் என்பவரிடமிருந்து சட்டவிரோதமாக ஆதாயம் அடையவேண்டும் என்பதற்காக அவரது செல்போனை திருடிச்சென்றுள்ளார் என்பதும், 4வது எதிரி அந்த செல்போனை வாங்கி

விற்பனை செய்வதற்காக தன் வசம் வைத்திருந்ததும் அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

(vi) எனவே 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) இவ்வழக்கின் 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி போதிய சாட்சிய, சான்றாவணங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 304(2) r/w 3(5) BNS இன் படியும் 4வது எதிரி மீது சட்டப்பிரிவு 317(2) BNS இன் படியும் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளிடம் அவர்களுக்கு அளிக்கப்போகும் தண்டனை குறித்து வினவிய போது "தாங்கள் ஏழைகள் என்றும், தங்களை நம்பி தங்களது குடும்பம் உள்ளதாகவும், தங்களது குடும்பத்தில் தாங்கள் ஒருவர் மட்டுமே வருமானம் ஈட்டும் நபர்கள் என்றும், தங்களுக்கு முன் வழக்குகள் எதிலும் தண்டனை தீர்ப்பு வழங்கப்படவில்லை எனவும், எனவே கருணை கூர்ந்து குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு" கேட்டுக் கொண்டனர்.

(viii) இவ்வழக்கின் சங்கதிகள், சூழ்நிலைகள் மற்றும் குற்றத்தின் தன்மை, பாதிக்கப்பட்ட நபர்களின் வயது ஆகியவற்றை பரிசீலனை செய்யும் பொழுது இவ்வழக்கின் எதிரிகளுக்கு சட்டப்பிரிவு 401 BNSS இன் பலன்களையோ, குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு சட்டம் 1958 இன் கீழான பலன்களையோ வழங்குவது உகந்ததாக இருக்காது என நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(ix) இவ்வழக்கில் எதிரிகளின் வயது, குடும்ப சூழ்நிலை அவர்களின் வாழ்வியல் அமைப்பு, மற்றும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இவ்வழக்கை பொறுத்து எதிரிகளுக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12. **முடிவாக**

1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 304(2) r/w 3(5) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு **ஒரு நாள் நீதிமன்றம் கலையும் வரை** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் தலா **ரூ.2,000/-** அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **ஒரு வார காலம்** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் 4 வது எதிரி மீது நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 317(2) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு **ரூ.2,000/-** அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **ஒரு வார காலம்** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 271(2) BNSS இன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. அபராதம் செலுத்த தவறுகைக்கான தண்டனையை தனியாக அனுபவிக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மொத்த அபராதத் தொகை **ரூ.8,000/-**

13. இவ்வழக்கில் பி.ஐ.எண்.432/2025 தாக்கல் செய்துள்ள இருசக்கர வாகனம் ஒன்று மற்றும் விவோ செல்போன் ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுச் சென்றுள்ளதால் வழக்கு சொத்துக்களை அதன் உரிமையாளர்களே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவர்கள் எழுதிக் கொடுத்த பிணை முறி இரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீா்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னா் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னா் இன்று 2026 - ஆம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

JAISANKAR Digitally signed by JAISANKAR

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | : | திரு.அய்யனார் (காவல் உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.ஆ.1** | : | புகார் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.2,** | : | முதல் தகவல் அறிக்கை | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.3** | : | பார்வை மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.4,** | : | மாதிரி வரைபடம் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.5,** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.6,** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.7,** | : | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.8,** | : | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.9,** | : | படிவம் 91 | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.10,** | : | புகைப்பட நகல் | அ.சா.1 |

அரசுதரப்பு சான்று பொருள் :-

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.பொ.1** | : | இருசக்கர வாகனம் மற்றும் விவோ செல்போன் | அ.சா.1 |

எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

**<u>Case Summary : -</u>**

1) எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் -- 4 days

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 02.09.2025

3) எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 03.06.2026

4) எதிரி மீதான குற்றச்சாட்டை விளக்கிக் கேட்ட நாள் -- 03.06.2026

5) இடைக்கால மனு விபரம் -- -------

6) சாட்சிகளின் விசாரணை நாள்

அ.சா.1 -- முதல் விசாரணை -- 04.06.2026

குறுக்கு விசாரணை -- 04.06.2026

7) எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 351(1) (b) BNSS ன்

கீழ் விசாரிக்கப்பட்ட நாள் -- 04.06.2026

8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் -- -----

9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் -- இல்லை

JAISANKAR Digitally signed by JAISANKAR

குறிப்பு :-

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இல்லை.

2) காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு தெரிவிக்கப்பட்டது.